வேண்டுமென்ற விதியைக்கூட நாங்கள் புரிந்துகொள்ளாமல் இருப்போம் என்று கருதுவது விந்தையாக இருக்கிறது. அந்தக் காரியம் நடைபெறும் சமயத்தில் எப்பொழுது வரவேண்டுமோ அப்பொழுது இந்த மன்றத்தின் முன்னால் வைத்து நிறைவேற்றப்படும்.

தஞ்சாவூர் காந்தி மார்க்கெட்

* 328 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் அமைந்திருந்த காந்தி மார்க்கெட் என்பது காமராஜ் மார்க்கெட் என்று ஏன், எப்போது மாற்றப்பட்டது ?

(இ) அதை மீண்டும் காந்தி மார்க்கெட் என்று வழங்கச் செய்வதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) தஞ்சாவூரில் அமைந்திருக்கும் "காந்தி மார்க்கெட்" என்பது "காமராஜ் மார்க்கெட்" என்று மாற்றப்படவில்லை. "கோட்டை காய்கறி மார்க்கெட்" என்பதுதான் "காமராஜ் மார்க்கெட்" என்று மாற்றப்பட்டது. தஞ்சையில் மானம்புசாவடி என்ற வேறு இடத்தில் "காந்தி மார்க்கெட்" என்று ஒரு மார்க்கெட் இருக்கிறது.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, சில மாதங்களுக்கு முன்னால் தீப்பற்றி எரிந்ததாகச் செய்தி வந்ததே, அது காமராஜ் மார்க்கெட்டில்தானே. அப்பொழுது பத்திரிகைகளில் முன்னால் இது காந்தி மார்க்கெட் என்று இருந்து, அது காமராஜ் மார்க்கெட் என்று பின்னாலே மாற்றப்பட்டது என்று செய்திகள் வந்திருந்தன. அதுபற்றிய விவரம் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பத்திரிகைகளிலே வந்த செய்திகளை ஆதாரமானவைகளாக எடுத்துக் கொள்ளத் தேவை இல்லை.

Staff Inspection Wing in Finance Department

* 315*Q.*—THIRU G. GOMATHISANKARA DIKSHDAR : **Will the Hon. the Minister for Finance be pleased to state whether there are proposals under the consideration of this Government to have a Staff Inspection Wing in the Finance Department ?**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட உத்தேசம் தற்சமயம் இல்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரில் இன்ஸ்பெக்ஷன் ஸ்டாஃப் ஏற்படுத்தியிருப்பதைப் போல, இங்கேயும் ஏற்படுத்தி, ஸ்டாஃப்கள் தேவைக்குத் தகுந்தபடி இருக்கிறார்களா, கூடுதலாக வேண்டுமா, அல்லது குறைக்க